## வெளிப்புற எச்சரிக்கை சங்குகள்

ஃபிரிஸ்கோ தீயணைப்பு துறை ஒவ்வொரு புதன்கிழமை அன்றும் மதியம் 12 மணிக்கு வெளிப்புற எச்சரிக்கை சங்குகளை ஒலிக்கும். இந்த வாராந்திர சோதனைகள், எச்சரிக்கை சங்குகள் ஒழுங்காக வேலை செய்வதையும், ஃபிரிஸ்கோவை அச்சுறுத்தும் கடுமையான வானிலைக்குத் தயாராக இருப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது

### சோதனை

எச்சரிக்கை சங்குகளின் வாராந்திர பரிசோதனை நாளன்று, வானம் அச்சுறுத்தும் நிலையன்றி, வெறும் மேகமூட்டமாகவும், கார்மேகங்கள் கொண்டதாகவும் இருப்பின், அன்று தீயணைப்பு துறை எச்சரிக்கை சங்குகளின் ஒலியெழுப்பும். எனினும் வானிலை முன்னறிவிப்பில் கடுமையான வானிலை இருப்பின், அன்று உண்மையில் அவசர சூழ்நிலை இல்லாவிடில், எச்சரிக்கை சங்குகள் ஒலிக்கப்படமாட்டாது.



## எச்சரிக்கை சங்குகள்

ஃபிரிஸ்கோ நகரத்தின் எச்சரிக்கை சங்கொலி அமைப்பு, நகரமெங்கும் பயன்படத்தக்க வகையில் 35 எச்சரிக்கை சங்குகளை நிறுவியுள்ளது. எச்சரிக்கை சங்குகளை தனியாகவோ அல்லது தொகுத்தோ குறிப்பிட்ட இடத்திற்கு எச்சரிக்கும் வகையில் செயல்படுத்தலாம். எச்சரிக்கை சங்குகளை ஒரே நேரத்திலும் பொதுவான எச்சரிக்கை வழங்க செயல்படுத்த முடியும். வெளிப்புற எச்சரிக்கை சங்குகளை மத்திய தீயணைப்பு நிலையம், ஃபிரிஸ்கோ காவல்துறையின் 911 அவசர உதவி அனுப்புதல் மையம், அல்லது சில குறிப்பிட்ட தீயணைப்புத்துறை வாகனங்கள் மூலம் கட்டுப்படுத்த முடியும்.




வெளிப்புற எச்சரிக்கை சங்குகள் அமைப்பு குடியிருப்பாளர்களை அண்மையில் நிகழவிருக்கும் கடும் வானிலைக்கு (சூறாவளி எச்சரிக்கை, 70 மைல்களுக்கு மேல் அழிவுகள் ஏற்படுத்தத்தக்க காற்று, மற்றும் 1.25" அல்லது அதற்கும் பெரிதான விட்டளவு கொண்ட ஆலங்கட்டி மழை), எச்சரிக்க சில தொனிகளை உபயோகப்படுத்துகிறது. பொதுமக்களுக்கு தகவல்கள் வழங்க, வானொலி மற்றும் தொலைக்காட்சி (நகரின் அரசாங்கதிற்கு அனுமதியுள்ள அலைவரிசைகள் உட்பட), தீயணைப்பு மற்றும் காவல்துறை வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள, பொது அறிவிப்பு சாதனங்கள், கூட தேவைக்கேற்ப உபயோகப்படுத்தப்படும்.

## பயன்படுத்தப்படும் 2 வகையான எச்சரிக்கை சமிக்ஞைகள்:

**ஒலமிடும் சமிக்ஞை:** கடுமையான வானிலை (உண்மையான சூறாவளி எச்சரிக்கை உட்பட) அத்துடன் எங்களின் புதன்கிழமை எச்சரிக்கை சங்குகளின் சோதனைக்கும் பயன்படுத்தப்படுகிறது

**எச்சரிக்கை சமிக்ஞை:** இது ஃபிரீஸ்கோ நகரம் அதன் குடிமக்களை, மற்ற எந்த சூழல்களின் போதும் விழிப்புடன் இருக்க எச்சரிக்க பயன்படுத்தப்படுகிறது, உதாரணமாக அபாயகரமான பொருள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள்.

## செய்கை (செய்யவேண்டியவை)

நீங்கள் எச்சரிக்கை சங்குகள் ஒலிக்கக் கேட்டால், உடனடியாக உள்ளே பாதுகாப்பான இடத்திற்கு செல்லுங்கள். தொலைக்காட்சி அல்லது வானொலியில் கூறப்படும் அறிவுறுத்தல்களை கவனமாகக் கேளுங்கள். WBAP வானொலி 820 AM நமது பகுதியில் நியமிக்கப்பட்ட அவசர எச்சரிக்கை அமைப்பு (EAS) நிலையம் ஆகும். ஃபிர்ஸ்கோவில் வசிக்கும் கேபிள் (கம்பிவட) தொலைக்காட்சி இணைப்புள்ளவர்கள்:

- கிராண்டே சந்தாதாரர்களுக்கான அலைவரிசை 12
- டைம்-வார்னர் சந்தாதாரர்களுக்கு அலைவரிசை 16
- வெரிசோன் FIOS சந்தாதாரர்களுக்கான அலைவரிசை 37
- AT&T U-verse சந்தாதாரர்களுக்கான அலைவரிசை 99

ஆபத்தான சூழல் கடந்து செல்லும் வரை உள்ளேயே இருங்கள். நீங்கள் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை அல்லது அபாயகரமான நிலைமையைத் தெரிவிக்க அன்றி, வேறு எந்த காரணத்திற்காகவும் 911 அல்லது ஃபிரிஸ்கோ தீயணைப்பு நிலையங்களை தொடர்புகொள்ளாதீர்கள்.